## 1-ம் நிலை

இதோ பிலாத்துவின் முன் கிறிஸ்து இயேசு. ஒரு குற்றமும் செய்யாத இந்த மாசற்ற செம்மறி பல கொடூர பாதகர்கள் மத்தியில் வாய் திறவாமல் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகிறார். ஒரு பாவமும் செய்யாத இயேசு, சென்ற இடங்களிலெல்லாம் அதிசயங்கள் செய்த இயேசு மரணத் தீர்ப்புக்கு உள்ளாகிறார். குற்றமற்றவர் என்பது தெரிந்தும் பதவியைத் தக்கவைத்துக்கொள்ள நீதிமானை பாவிகள் கையில் கையளிக்கும் பிலாத்து ஒருபுறம். தங்கள் செல்வாக்கையும் பாரம்பரியத்தையும் கட்டிக்காக்க தடையாக இருக்கும் இயேசுவைக் கொல்ல துடிக்கும் மத குருக்கள் மற்றொருபுறம். சிலுவையில் அறையுங்கள் என்று கூச்சலெழுப்பும் கூலிப்படைகள் மற்றொரு புறம். சிலுவைப் பாதையில் தடம் பதித்தோரே, சிந்தியுங்கள். இப்படிப்பட்ட செயல் அன்று மட்டுமா? இன்றும் நம்மிடையே நடக்கவில்லையா? பொய்க்குற்றம் சாட்டி வதந்தி பரப்பி குற்றமற்றவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் போதெல்லாம், தட்டிக்கேட்க துணியாதபோதெல்லாம் நீதியைக் கொலை செய்கிறோம். பணத்தையும் பதவியையும் குடியையும் கொடுத்து கூட்டம் சேர்த்து அநீதிக்குத் துணை போகும் போதும், அநீதத் தீர்ப்புக்கு அமைதி காக்கும்போதும், ஆண்டவரை நீதிமன்றத்தில் நிறுத்துகிறோம். பிலாத்தின் கொடூரத் தீர்ப்புக்கு துணை போகிறோம் என்பதை மறந்து விடவேண்டாம்.

## 2-ம் நிலை

பாரமான சிலுவை இயேசுவின் தோளில் சுமத்தப்படுகிறது. சாட்டையடி, காரி உமிழ்வு, ஏளனப்பேச்சு, கெட்டவார்த்தை, எட்டி உதைப்பு, முள்முடி என துன்பத்தின் விளிம்பிற்கு இயேசு தள்ளப்படுகிறார். இயேசுவின் தோளில் பாரச்சிலுவை சுமத்தப்படுவதைப் பார்த்து பரிதாபப்படும் நாம், நம்மைப்போன்ற மனிதர்கள் மீது அநியாயமாய் சுமத்தப்படும் பழிகளுக்காக இரக்கப்படுகிறோமா? அவற்றை அவர்களிடமிருந்து நீக்கிட முயலுகிறோமா? பணச்செலவு வந்துவிடுமோ? மறறவர் ஏளனமாய் நினைப்பார்களோ? உறவுகள் முறிந்திடுமோ? ஏன் ஒதுங்குகிறோம். குடும்பச்சுமைகளைக் கூட ஏற்காது ஒதுங்குகிறோம். பசி-பிணி போன்ற பாரச் சுலுவைகளால் துன்பப்படுவோரின் சிலுவைகளை அகற்ற முற்படுவதில்லை. துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை. சுமை இல்லாமல் சுகமும் இல்லை. அன்பு சுமந்து காக்கும். அடுத்தவரின் சுமைகளைச் சுமப்பவர் கடவுளின் முகம் காட்டும் கண்ணாடிகளாகும். சுமப்பது தெய்வீக நிகழ்வு. பிறருக்காக சுமை சுமந்தால் தெய்வம் நம்மிலே வெளிப்படும்.

## 3 –ம் நிலை

மண்ணோடு மண்ணாய் விண்ணவர் இயேசு வீழ்ந்து கிடக்கிறார். சுமை என்று வந்தவர்க்கு தோள் கொடுத்தவர். தாழ்நிலை நின்றவர்க்கு கைகொடுத்தவர் வலுவிழந்தவர் சிங்கம்போல் முகம் குப்புற வீழ்கிறார். வீழ்வது பலவீனம், பிறரை வீழ்த்துவதும் பலவீனம்

வீழ்ச்சியில் எழுச்சிபெறுவது தெய்வீக செயல். வாழ்வின் வீழ்ச்சி நமது அறியாமையால் வருவது. இதனை உணராத நம்மில் பலர் தலைவிதி,

கர்மம், கடவுள் சித்தம், தலையெழுத்து, செயல்வினை, சாத்தானின் வேலை என்று சோம்பேறியாய் வீழ்ந்து கிடக்கிறோம். பண ஆசைக்கு, தீய பழக்கவழக்கங்களுக்கு, சுய நலங்களுக்கு, போதைப்பொருட்களுக்கு அடிமையாகி வீழ்ந்து கிடக்கிறோம். குடியில், சூதாட்டத்தில் ஒழுங்கீனத்தில், வட்டிப்பணத்தில், கையூட்டில் வீழ்ந்து கிடப்பவர்கள் இயேசு எழுந்ததுபோல் எழுவார்களா? திருச்சபைப் பற்றிய தெளிவைப் பெறாது பிற சபையினரின் பிதற்றலகளுக்குள் வீழ்ந்துகிடக்கும் நாம் எழுவது எப்போது?. பாரச்சிலுவையுடன் பாரில் வீழ்ந்த பரமன் எழுந்துவிட்டார். அதுபோல் நாமும் நமது வீழ்ச்சிகளிலிருந்து விலகி எழுச்சி பெறுவோமா?

4-ம் நிலை

இதோ! இயேசுவின் உடலெல்லாம் காயங்கள், தலையில் முள்முடி, தோளில் பாரச்சிலுவை, காயப்பட்ட மேனி, இவற்றுடன் துடிதுடிக்க இயேசு தன் தாயைச் சந்திக்கிறார். உருமற்றவர்க்கு உருவம் கொடுத்தவள் தன் உயிர்படும் துன்பத்தை கண்டு வெறும் கண்ணீர் வடிக்கவில்லை மாறாக இரத்தக் கண்ணீர் வடிக்கிறாள் தன் உள்ளத்தினுள் . பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்ட தன் பாசமகனை மரியாள் தன் கனிந்த பார்வையில் உருகும் அன்பை பெருகும் வேதனையை பேச முடியா நிலையில் பார்வையில் பரிமாறுகிறார். . கலங்கிய கண்கள், மௌனப்பார்வை, ஒருவரையொருவர் தேற்றிக்கொள்ளும் விதத்தில் அன்னைமரியா மௌனத்தில் பேசுகிறார்.
நமது குடும்பங்களில், அன்று தன் மகன் படும்பாட்டை கண்டு துடிதுடித்தாள் தாய். ஆனால் இன்று தன் மகன் படுத்தும்பாட்டால் துடிதுடிக்கும் தாய்மார்கள் எத்ததனை? எத்தனை? இன்றைய வளர்ந்து வரும் நாகரீக உலகில் மறைந்து கொண்டிருக்கும் தாய்-சேய் உறவுகள் மனித மாண்பின் சிதைவிற்கான முதல்படி. தாய்ூசேய் உறவு வளர நாம் என்ன செய்ய போகிறோம்.

5-ம் நிலை

கல்வாரி பயணத்தில் களைத்துப்போன இயேசுவுக்கு உதவிட யாருமில்லை. அவரது புதுமைகளால் புத்துயிர் பெற்றவர்களும் அவருக்கு உதவிட வரவில்லை. அவரது புதுமைகளால் பண்பார்வை பெற்றவர்களும் துன்புறும் இயேசுவை காண முன்வரவில்லை. அன்புச்சீடர்கள் கூட ஓடி ஒளிந்து கொண்டனர். இந்த உலகை படைத்த தேவனுக்கே அவருடைய பாதையில் உதவி தேவைபட்டது என்றால் மனிதர்களாகிய நாம் எம்மாத்திரம்? இணைந்து செயல்படுவதன் வழியாக இறைவனின் பிரசன்னத்தை நம்மால் உணர முடியும். இணைந்து குடும்பமாய் வாழ்வதே கிறிஸ்தவப் பண்பு. இதுவே மானிடப் பண்பு. உதவி தேவைப்படுகழன்ற ஒவ்வொருவருமே இயேசுவின் மறுவுருவமே!
யார் இந்த சீமோன்? பிறரின் சுமையை சுமந்ததால் பெரியோனாகக் கருதப்பட்டான். பிறர் சுமையைச் சுமப்பவர்களே பெரியோர்களானால் பிறருக்குச் சுமையாய் இருப்பவர்கள் சிறியவர்களே. நாம் எந்த பக்கம்? காத்திட யாருமின்றி கைவிடப்பட்டவர்களாய், வலுவிழந்து வாடி

நிற்போருக்குக் கை நீட்டி கரம் கொடுக்கும் ஒவ்வொருவரும் இயேசுவின் பார்வையில் சீமோன்களே!

## 6-ம் நிலை

கனத்த சிலுவையோடு கலங்கிய கண்களோடு, கால் தடுமாற பயணத்தை தொடரும் போது கன்னி ஒருத்தி கைம்மாறு கருதாது குருதி படிந்த திருமுகத்தைத் துடைக்கிறாளே. ஈராயிரமாண்டுகளுக்கு முன் எப்படி வந்தது இந்த துணிவு? வெரோணிக்காள் என்ற வீரமங்கைக்கு நெஞ்சில் இரக்கம் இறங்கியதால் ஈரமங்கை வீரத்தோடு துயர்துடைக்க முன்வருகின்றாள். எந்த ஆண்மகனுக்கும் வராத துணிவு ஏழைப் பெண்ணுக்கு எப்படி வந்தது? இவளின் வீரத்திற்கு இலக்கணம் என்ன? பணமா? பதவியா? இல்லை. அவள் உள்ளத்தில் ஊறிக்கிடந்த அன்பு. என்னைப் படைத்தக் கடவுள் - என்னை வாழ வைத்த க்டவுள் - அவரின் திருமுகத்தை துடைத்துப் பார்க்க எனக்கொரு வாய்ப்புக் கிடைத்து விட்டால் என்னுடைய வாழ்க்கையின் சாதனை என்று அத்தனை சோதனைகளையும் தாண்டி இயேசுவின் திருமுகத்தை துடைக்கின்றாள். இந்த துணிவு இன்று அத்தனைப் பெண்களுக்கும் வரவேண்டும். அப்போதுதான் பெண்ணினத்தின் அடிமைத்தனம் அகன்றுபோகும். பெண்ணினமே! நீ தேங்கிக் கிடக்கும் குட்டையாக இல்லாமல் ஓடையாய் ஊருக்கள் ஓடி உழைத்திடு. நீ பார்வையாளியாய் இருந்தது போதும் - பங்கேற்பவராய் மாறிடு. அன்பு மகளே! பழிக்குற்றங்கள் எவர் வாயிலிருந்து புறபபட்டாலும் உன் சிந்தைக்குப் புறம் பாகட்டும் விமர்சனங்களுக்கு பயந்து வீட்டுக்குள் பதுங்காதே. சம்பிராயத்திற்கு பயந்து சரித்திரத்திலிருந்து ஒதுங்காதே. இனியும் நீ கண்ணீர் வடிக்க பிறந்தவள் அல்ல. கண்ணீர் துடைக்கப் பிறந்தவள் என்பதை மறவாதே.

## 7-ம் நிலை

நீண்ட தூரம் நடந்துவிட்ட இயேசு நீசர்களின் கொடுமையால் நிலைதடுமாறி கீழே விழுகிறார். இரக்கமற்றவர்கள் குத்தி கிளறுகிறார்கள். அவரது உடல் உடைக்கப்பட்டாலும் உள்ளம் தளர்ந்து விடவில்லை. இதயம் சிதைக்கப்பட்டாலும் அவரது இலட்சியத்தை அவர்களால் அலட்சியப்படுத்த முடியவில்லை. ஆதலால் வீழ்ந்தவர் எழுந்தார். வீறு கொண்டு நடந்தார். வீழ்வது நானாக இருந்தாலும் வாழ்வது நீயாக இருக்கட்டும் என்று மௌனமாய் பேசுகிறார். அன்பு இளைஞனே! வாழ்க்கைப்பாதையில் சிறிய தடுமாற்றம் ஏற்பட்டவுடன் சிந்தை நொறுங்கி, உள்ளம் ஒடுங்கி நீ மூலையிலே முடங்கி விடுவதேன்? நம்பியவர் நம்மைக் கைவிடும்போது வாழ்வே முடிந்துவிட்டதாய் இடிந்து போவதேன்? என்னைப்போல் எத்தனை முறை ஏழுந்து நடக்க நீ முயன்றாய்? இளைஞனே! உயர்ந்த இலட்சிய்ங்களோடு உட்கார்ந்துவிடாதே –உறுதியாய் உழைத்திடு. வீழ்வது மனித பலவீனம் - வீழ்ந்து கிடப்பது மனித அறிவீனம். - சிந்தித்துப்பார். சிந்தித்தவர்கள் தான் சீர்திருத்தவாதிகள். போராட்டத்தை சந்தித்தவர்கள் தான் சரித்திரத்தில் இருக்கின்றார்கள். இன்னும் ஏன் தயக்கம்? எழுந்து நட எழுச்சியோடு - என்கரத்தைப் பற்றிக்கொள்

## 8-ம் நிலை

“உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்”. இதன் அர்த்தம்தான் என்ன? எனது வாழ்க்கையை பாடமாக்கி உங்களின் குடும்ப நிலையை உணரச் செய்கிறார் இயேசு. எனக்கு ஏற்பட்ட கொடுமைகளுக்காக அழும் நீஙகள் சமுதாயத்தில் உங்களுக்கெதிராக நடந்துவரும் கொடுமைகளை நினைத்து என்றாவது அழுதீர்களா? உங்களை அழகுப் பொருள்களாக்கி அலங்கோலப்படுத்தும் அயோக்கியத்தனங்களை நினைத்து என்றாவது அழுதீர்களா? ஒழுக்கமற்ற நடத்தையால் கட்டிய கணவரையும், பெற்ற பிள்ளைகளையும் சின்னாபின்னமாக்கும் உங்களைப் போன்றோரின் வாழ்க்கையை நினைத்து அழுததுண்டா? எனவே இன்று - வாழவரும் பெண்களை பேரம் பேசும் மாமியார்களுக்காக அழுங்கள். வசதியில்லை என்ற காரணதத்திற்காக வாசற்படியை மிதிக்க அனுமதிக்கா வெளிவேடக்காரர்களுக்காக அழுங்கள். முதுமை என்ற காரணத்திற்காக முதியவர்களை அனாதை இல்லங்களுக்கு அனுப்பும் இதயமற்ற உங்கள் குடும்பத்தினர்க்காக அழுங்கள். உங்கள் ஊதாரித்தனத்துக்காக அழுங்கள்.

## நிலை 9

இயேசுவின் கண்களுக்கு கல்வாரியின் எல்லை தெரிகிறது. கால்களுக்கோ தடுமாற்றம். கலிலேயா, யூதோயா, சமாரியா எங்கும் அலைந்து திரிந்த இறைமகனின் தெய்வீகக் கால்கள் - பிணியாளரையும் பாவிகளையும் தேடிச்சென்ற திருக்குமாரனின் திருக்கால்கள் - கரடுமுரடான கற்களும் கூரான முட்களும் இப்போது பதம் பார்க்கின்றன. சதை கிழிய, இரத்தம் சிந்த நரம்புகள் சுண்டி இழுக்க காலகள் சோர்ந்து மூன்று முறை கீழே விழுகிறார். இயேசு எத்தனை முறை விழுந்தார் என்பது முக்கியமல்ல எதற்காக விழுந்தார் என்பது தான் முக்கியம். வாழ்க்கையில் ஒரு முறை விழுந்தவர்கள் எல்லாம் நிலை தடுமாறி முடிவை தேடி கொள்கிறார்கள். இறைமகன் மூன்று முறை விழுகிறார். ஆனால் முறைப்படி எழுகிறார். நிமிர்ந்து பயணத்தை தொடர்கிறார், ஆனால் நாம் எழ முடியாமல், ஆசையில் விழுகின்றோம். கோபத்தில் விழுகின்றோம். பகையில் விழுகின்றோம். பிடிவாதத்தில் விழுகின்றோம். நமது நிலையை சீர்தூக்கிப் பார்த்து பழையன கழிந்து புதிய உலகம் படைத்திட புத்துயிர்பெற்று இயேசுவுடன் எழுவோம். பயணம் தொடர்வோம்.

## 10 – ம் நிலை

அன்பார்ந்த என் மகனே மகளே! என் ஆடைகளையா அகற்றினர். இல்லை – என்னுடைய அடிப்படை உரிமையை அல்லவா அகற்றியுள்ளார்கள். என்னை ஓர் ஆளாக கருதாமல் என் உடை முழுவதையும் அபகரித்து கொண்டார்கள். நண்பர்களே! எங்கெல்லாம் மனித மாண்புகளுக்கெதிராக நிகழ்சிகள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் ஆண்டவனின் ஆடைகள் அகற்றப்படுகின்றன. ஒன்றான மனித இனத்தை சாதி, சமயம் பணம், பட்டம்,

பதவி ஆகியவற்றால் வேறுபடுத்தும்போதும் கூறுபோடும்போதும் இயேசுவின் ஆடைகளைக் கூறு போடுகிறோமே! அழுக்கு படியாத ஆடைகளுக்கு அர்ச்சனை செய்பவர்களே ஆண்டவன் பார்ப்பது ஆடையை அல்ல அகத்தினை. என் துகில் உரிப்பவர்களே! குடும்பங்களில், பங்குகளில், பணித்தளங்களில் ஒற்றுமை அகல பிளவுகளுக்கு வித்திடும்போதும் வீணாக பிறர் பெயர்கெடுக்க இல்லாதது பொல்லாதது சொல்லி பொய்ப் பிரச்சாரம் செய்யும்போதும் இயேசுவின் உரிமை மறுக்கப்படுகிறது. இவற்றிலிருந்துவிடுபட முதலில் நாம் நம்முடைய சுயநலம் என்ற ஆடையை அப்புறப்படுத்துவோமா?

11 —ம் நிலை

இதோ கழுமரத்தில் கருணை வள்ளல். குருடர்களையும், சூம்பியக் கையரையும், பிடிவாதக்காரரையும் தொட்டு குணப்படுத்திய பரமனின் பட்டுக் கரங்கள் பாரச் சிலுவையோடு ஒட்டி அறையப்படுகின்றன. காடு மேடெல்லாம் கடந்து சென்று கடமையாற்றிய கால்கள் சிலுவை கட்டையோடு சேர்த்து அறையப்படுகின்றன. உடம்பிலே எஞ்சியிருந்த கொஞ்சம் இரத்தமும் ஆணிக் காயங்கள் வழியே வழிந்தோடி குவலயத்தை நனைக்கினறது. - கன்னியின் வயிற்றில் கருவானவர் இ.ங்கே சிலுவையில் சிதைக்கப்படுகின்றார். அவமானத்தின் சின்னமாகிய சிலுவை இங்கே அர்ச்சிக்கப்படுகிறது. மரணத்தின் சின்னம் இங்கே மகிமையடைகிறது. ஆயினும் அடித்தவரையும் அவமானப்படுத்தியவரையும் , அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும் என்று தந்தையிடம் மன்றாடுகின்றார். நம் சகோதர சகோதரிகளை எத்தனை முறை சுயநல ஆணிகளால் அறைந்திருக்கிறோம். இரும்பு ஆணிகளை விட நாம் கொடியவர்களாய் சில சமயங்களில் வாழ்ந்திருக்கிறோம். தடியால் அடிப்பதை விட தடித்த சொற்களால் அடிப்பது அதிக வலியை தரும். வாளால் வெட்டபடுவதைவிட வார்த்தைகளால் வெட்டபடுவது அதிக வேதனையை தரும் - சிந்திப்போம்.

12 —ம் நிலை

பாடல்.........

13 —ம் நிலை

பத்து மாதம் உதிரத்திலும் 33 ஆண்டுகள் இதயத்திலும் சுமந்த மகனை உயிரற்றவராத் தன் மடியிலே சுமந்து காட்சியளிக்கிறார் நம் தேவஅன்னை. சிதைக்கப்பபட்ட ஓவியமாய் - உரித்து போட்ட நாராய் - உலர்ந்து போன மைந்தனை மடியில் கிடத்தியவராய் - கண்ணீர் முத்துக்களை சொரிந்தவராக மடியில் சுமக்கிறார் அன்னை மரியா. ஆசீர்வதிக்கபட்டவர் இங்கே அவல நிலை காண்கிறார். இயேசுவின் வார்த்தைகளை இதயத்தில் சுமந்தவர் இன்று அவரது உடலை மடியில் சுமக்கிறார் அன்னை மரியா. பத்து மாதம் கருவில் சுமந்தவர் பட்டு போன மகனை மடியில் சுமக்கிறார். தேவ

அன்னை தன் அன்பு மகனின் இரத்தக் கறைபடிந்த முகத்தையும், 5 காயங்களையும் பார்த்து சொல்லொண்ணா வேதனைப்படுகிறார். ஏன் இந்த போராட்டம்? எல்லோரும் மீட்பு பெறவேண்டும் என்பதற்காக தன்னையே நமக்காக அர்ப்பணமாக்கிறார். அவர் சொல்வதைச் செய்யுங்கள் என்று வாழ்ந்தவா் அதையே நம்மிடம் எதிர்பார்க்கிறார் இந்த வியாகுலத்தாய்.